(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 1.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் புத்தகம்

**2018 நவெம்பர் 29, வியாழக்கிழமை உட்பட அன்றைய தினத்திலிருந்து**
**2018 நவெம்பர் 19, திங்கட்கிழமை வெளியிடப்பட்டது**

---

## 2018 நவெம்பர் 29, வியாழக்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.1/ ’18

1.

கௌரவ நவின் திசாநாயக்க

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி

கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ சத்துர சந்தீப சேனாரத்ன,— குடியரசின் நிதியிலிருந்து எந்தவொரு செலவினத்தையும் மேற்கொள்வதற்கான அங்கீகாரத்தை வழங்குவதற்கு பிரதம அமைச்சரின் செயலாளருக்கு அதிகாரமின்மை,—

2018 நவெம்பர் 14 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையின்மைப் பிரேரணையின் 2 ஆம் பந்தி தொடர்பாக அரசியலமைப்பின் உறுப்புரை 48 இன் பிரகாரம் அமைச்சரவை கலைக்கப்பட்டிருப்பதாக 2018 நவெம்பர் 15 ஆம் திகதிய கௌரவ சபாநாயகரின் உத்தியோகபூர்வ அறிவிப்பினை இந்தச் சபையானது 2018 நவெம்பர் 16 ஆம் திகதி ஏற்றுக்கொண்டுள்ளதாலும், அதற்கிணங்க, அரசியலமைப்பின் உறுப்புரை 48 இல் உத்தேசிக்கப்பட்டவாறு 2018 ஒக்டோபர் 26 ஆம் முதல் கௌரவ மஹிந்த ராஜபக்ஷ உள்ளடங்கலான அரசாங்கத்தின் மீது இச்சபையானது நம்பிக்கையின்றிக் காணப்படுவதாகவும் இச்சபையானது மேலும் பிரேரணை நிறைவேற்றியுள்ளதாலும்;

அரசியலமைப்பின் உறுப்புரை 148 இன் படி, இச்சபையானது பகிரங்க நிதியின் மீது பூரண கட்டுப்பாட்டினைக் கொண்டுள்ளதாலும்;

அதற்கிணங்க, 2018 நவெம்பர் 15 ஆம் திகதி முதல் பிரதம அமைச்சரின் செயலாளருக்கு குடியரசின் நிதியிலிருந்து எந்தவொரு செலவினத்தையும் மேற்கொள்வதற்கான அங்கீகாரத்தை வழங்குவதற்கான அதிகாரமில்லையென்பதுடன், இத்தீர்மானத்தினை மீறும் எந்தவொரு ஆளுக்கெதிராகவும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக.

---